DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.:239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw11 |
| Name | : | ஏழுமலை |
| Father's / Husband's Name | : | ஜெயராமன் |
| Age | : | 48 |
| Religion | : | இந்து |
| Calling | : | ஓட்டுநர் |
| Caste | : | Naidu |
| Village | : | வாலாஜா |
| Date | : | 04.12.2018. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். சுமார் பத்து வருடத்திற்கு முன்பு ஒரு நந்தகோபால் என்பவருடன் க்ளீனராக வேலை செய்து வந்தேன். நந்தகோபால் என்னிடம் பத்திரம் பதிவு செய்பவர்கள் தெரியுமா என்று கேட்டார் நான் கோட்டீஸ்வரனை சொன்னேன். போலிஸார் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தற்போது வாலாஜாவில் வசிக்கிறேன். சம்பவத்தின் போது நான் மேல்புதுப்பேட்டையில் இருந்தேன். சம்பவத்தின்போது நான் க்ளீனராக இருந்தேன் தற்போது ஓட்டுநராக பணி செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வண்டி வேலை செய்யும்போது நந்தகோபால் மற்றும் கோட்டீஸ்வரனை நான் பார்த்துள்ளேன். உங்களுக்கு கோட்டீஸ்வரனை தெரியுமா என்றால் தெரியாது அவருடைய தந்தையாரைத் தான் தெரியும். நந்தகோபால் என்பவர் நான் க்ளீனராக வேலை செய்த வண்டியின் ஓட்டுநர். நந்தகோபால் என்னிடம் சம்பவத்தை பற்றி எதுவும் கேட்கவில்லை. காவல் துறையினர் யாரும் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் எந்த கையெழுத்தும் வாங்கவில்லை, காவல் நிலையமும் செல்லவில்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.:239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw12 |
| Name | : | ஜெயகுமார் |
| Father's / Husband's Name | : | வரதராஜ் |
| Age | : | 54 |
| Religion | : | இந்து |
| Calling | : | விவசாயம் |
| Caste | : | SC |
| Village | : | காரை, இராணிப்பேட்டை |
| Date | : | 04.12.2018. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். அன்பழகன் என்பவர் எனக்கு தூரத்து உறவினர். நவல்பூரை சேர்ந்த சீனிவாசன் என்பவரிடம் பூர்வீக இடத்தை 1999 ஆம் அண்டு கிரையம் வாங்கினார். பத்திர பதிவு செய்ய வேண்டி என்னை அழைத்தார் நான் சென்றேன். வாலாஜாவை சேர்ந்த பத்திர எழுத்தர் சுந்தர மூர்த்தியிடம் சென்று விசாரித்தோம். தனுஷ்கோடி, சுந்தரமூர்த்தி ஆகியோருடன் நான் உடன் சென்றேன். சுந்தரமூர்த்தி அவருடைய மகன் கோட்டீஸ்வரனை வைத்து பத்திர பதிவு செய்ய சொன்னார். பத்திரம் பதிவு செய்ய அன்பழகன் என்பவர் பணத்தை சுந்திரமூர்த்தியிடம் கொடுத்தார். கோட்டீஸ்வரன் பத்திரம் வாங்கிவந்தார். அந்த பத்திரத்தில் நானும் தனுஷ்கோடி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். சாட்சியிடம் அ.சா.ஆ.5 ஆவணத்தின் முதல் பக்கத்தின் பின்புறம் காண்பிக்கப்பட்டு அதில் "இன்னார் என்ற ரூபித்தவர்" என்ற இடத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து தன்னுடைய என்று ஒப்புக்கொண்டார். எனக்கு முன்பு உள்ள ஒன்றாவது சாட்சி கையெழுத்து தனுஷ்கோடி என்பவருடையது. என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. என்னை போலிஸர் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தற்போது இராணிப்பேட்டையிலுள்ள காரையில் வசித்து வருகிறேன்.

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன், தற்போது செய்யவில்லை. நான் வழக்கறிஞர் தொழில் படித்தேன். டிஸ் கன்டின்யூ செய்துவிட்டேன். நான் இருபது வருடமாக ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் ஆற்காடு, இராணிப்பேட்டை பகுதிகளில் நிலங்களை பிளாட் போட்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நவல்பூர் இடத்தை நான் வாங்கிக்கொடுக்கவில்லை. நான் பத்திரம் பதிவுசெய்வதற்காக தனுஷ்கோடியுடன் சேர்ந்து கோட்டீஸ்வரனிடம் சென்றீர்களா என்றால் இல்லை அவருடைய அப்பா சுந்தர மூர்த்தி என்பவரிடம் சென்றோம். கோட்டீஸ்வரனும் அவருடைய அப்பாவும் தனித்தனியாகதான் தொழில் செய்து வருகிறார்கள். நான் பணம் கொடுக்கவில்லை, அன்பழகன் என்பவர் சுந்தரமூர்த்தியிடம் கொடுத்தார். நான் அப்போது உடன் இருந்தேன். சுமார் பகல் 12 மணியளவில் இந்த செயல்பாடு நடந்து பத்திரம் செய்து வந்தார்கள். அவர்கள் எங்கு பத்திரம் வாங்கினார்கள் என்றும் எங்கு தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிரைய ஆவணத்தில் சாட்சியாக கையெழுத்துப் போட யார் சொன்னார்கள் என்றால் என்னுடைய மாமா அன்பழகன் என்பவர்தான் கையெழுத்துப்போட சொன்னார் நான் கையெழுத்து போட்டேன். கோட்டீஸ்வரனிடம் நீங்கள்தான் அழைத்து சென்றீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கோட்டீஸ்வரன் கனகசபை என்பவரிடம் சென்று பத்திரம் வாங்கிவந்த விஷயம் உங்களுக்கு தெரியும் என்று வழக்கிற்காக வேண்டி மறைக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் சுந்தர மூர்த்தி மகன் கோட்டீஸ்வரனை உங்களுக்கு நன்றாக தெரியும் என்றும் வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சி.பி.சி.ஐ.டி போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள். போலிஸார் என்னுடைய வீட்டிற்கு வந்துதான விசாரணை செய்தார்கள். வேலூரில் உள்ள சி.பி.சி.ஐ.டி அலுவலகத்திற்கு வந்து கையெழுத்துப்போட சொல்லி கேட்டார்களா என்றால் எதுவும் கேட்டகவில்லை. பத்திர பதிவிற்காக நீங்கள் அவரை அழைத்து சென்றீர்கள் என்றும் வழக்கிற்காக வேண்டி தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.:239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw13 |
| Name | : | சீனிவாசன் |
| Father's / Husband's Name | : | பூங்காவனம் |
| Age | : | 64 |
| Religion | : | இந்து |
| Calling | : | -- |
| Caste | : | Naicker |
| Village | : | லாலப்பேட்டை |
| Date | : | 04.12.2018. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

இராணிப்பேட்டையில் உள்ள நவல்பூரில் எனக்கு சொந்தமான நிலம் இருந்தது அதை காவனூரில் உள்ள அன்பழகன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டேன். நான் விற்றது 1999 ஆம் ஆண்டு இருக்கும். நான் 1,40,000 ரூபாய்க்கு கிரையம் செய்து கொடுத்தேன். சுந்தரமூர்த்தி பத்திரம் எழுத மற்றும் அன்பழகன் கொடுத்த பத்திரத்தில் கையெழுத்து போட்டேன். தற்போது சாட்சி சொன்ன ஜெயகுமாரும் என்னுடைய தம்பி தனுஷ்கோடியும் கையெழுத்து போட்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம் அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆவணம் சாட்சியிடம் காண்பித்து அதில் உள்ள ஒவ்வொரு பக்கத்திலும் விற்பனையாளர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்று கேட்க தன்னுடையதுதான் என்றார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தற்போது நவல்பூரில் வசித்து வருகிறேன். நவல்பூரில் உள்ள என்னுடைய நிலத்தை விற்பதற்காக நான் அன்பழகன் என்பவரிடம் பேசினேன் என்றால் சரிதான். இதற்கு முன்னதாக சாட்சி சொன்ன அ.சா.12-ஜெயகுமார் என்பவர் நிலத்தை விற்று வியாபாரம் செய்ய என்னிடம் வந்தார். விற்பனை செய்யப்பட்ட நிலம் என்னுடைய குடும்பத்திற்கு சொந்தமானது. ஜெயகுமார்தான் வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என்னை அழைத்து சென்றார். நிலத்தை என்னிடமிருந்து கிரையம்

பெற்ற அன்பழகனை கிரையம் வாங்கும்போதுதான் தெரியும் அதற்கு பின்பு எனக்கு அவரை பற்றி தெரியாது. பத்திரம் தயார் செய்தது யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கையெழுத்து போட சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்கு அழைத்து என்னை விசாரிக்கவில்லை.